இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,

ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி நிகழ்ச்சித் திட்டம்

இறுதிப் பரீட்சை 2007 - பகுதி II

**ESP 2269 –** ஆரம்ப மட்டத்தில் தமிழ் மொழி கற்பித்தல்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 05.06.2007 நேரம்: மு.ப 9.30 - பி.ப 12.30

எவையேனும் மூன்று வினாக்களுக்கு(03) விடையளிக்க.

1. (i) "கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய அடிப்படை மொழித்திறன்கள், பாடத்திட்டத்தில் தனித்தனியாக முன்வைக்கப்பட்டிருந்தாலும் அவற்றை ஒன்றிணைத்தே கற்பித்தல் வேண்டும்" உதாரணங்களுடன் விளக்குக.

   (ii) "கேட்டுக் கிரகித்தலில் தேர்ச்சியுள்ள மாணவன் பேச்சுத்திறனை விருத்தி செய்து கொள்வான்" விளக்குக.

   (iii) ஆரம்ப வகுப்பு மாணவர்களின் கேட்டல் திறனை விருத்தி செய்ய வகுப்பறையில் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் இரண்டினை விபரிக்க.

2. (i) பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ற வகையில் உரையாடும் திறனை, ஆரம்ப வகுப்பு மாணவர்களிடையே விருத்தி செய்வதற்காக வகுப்பறையில் வழங்கக்கூடிய செயற்பாடுகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

   (ii) ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்குப் பொருத்தமான இரு பாடப்பகுதிகளைக் குறிப்பிட்டு, பேச்சு விருத்திக்காக அவற்றை எவ்வாறு வகுப்பறையில் பயன்படுத்துவீர்கள் என விபரிக்க.

   (iii) ஆரம்ப வகுப்பு மாணவரிடையே காணப்படும் பேச்சுக் குறைபாடுகள் மூன்றினைக் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றையும் நிவர்த்தி செய்வதற்கு நீங்கள் மேற்கொள்ளும் பரிகார நடவடிக்கைகளை விளக்குக.

3. (i) ஆரம்ப வகுப்பு மாணவரின் சொற்களஞ்சியத்தை விருத்தி செய்வதற்கான வாசிப்புச் செயற்பாடுகள் இரண்டினைக் குறிப்பிட்டு, அவற்றை எவ்வாறு வகுப்பறையில் செயற்படுத்துவீர்கள் என விளக்குக.

   (ii) "நயத்தலுக்காக வாசித்தல்" என்பதை விளக்கி ஆரம்பவகுப்பு மாணவரிடையே இத்திறனை விருத்தி செய்ய நீங்கள் எடுக்கும் மூன்று நடவடிக்கைகளை விளக்குக.

   (iii) ஆரம்ப வகுப்பு மாணவரின் ஆக்கத்திறனை மேம்படுத்துவதற்கான, வகுப்பறையில் வழங்கக்கூடிய வாசிப்புச் செயற்பாடுகள் இரண்டினை விபரிக்க.

4. (i) எழுத்துப் பொறிமுறைத்திறன் என்றால் என்ன? உதாரணங்களுடன் விளக்குக.

(ii) முதனிலை மட்டம் ஒன்றில் எழுத்துப் பொறிமுறைத் திறன்களை விருத்தி செய்வதற்காக நீங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை விபரிக்க.

(iii) "வாசிப்புத்திறனை விருத்தி செய்வதன் மூலம் எழுத்தாக்கத்திறனை விருத்தி செய்யலாம்" விளக்குக.

5. (i) "சிறார்களின் கல்வியில் மொழி விருத்தியின் அவசியம்" என்பது தொடர்பாகக் கல்வியியலாளர்கள் எவரேனும் இருவர் முன்வைத்த கருத்துக்களை விளக்குக.

(ii) கற்றல் இடர்ப்பாடு கொண்ட மாணவர்களை எவ்வாறு இனங்காண்பீர்கள்?

(iii) மீத்திறன் மாணவர்களை எவ்வாறு கண்டறிவீர்கள்? அவர்களுக்காக வகுப்பறையில் மேற்கொள்ளக்கூடிய மேலதிகச் செயற்பாடுகள் இரண்டினை விளக்குக.

6. <u>பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.</u>

(i) முதனிலை மட்டம் மூன்றில் பந்தியமைத்தல் திறனை விருத்திசெய்வதற்காக வகுப்பறையில் கையாளக்கூடிய மூன்று நடவடிக்கைகளை விபரிக்க.

(ii) கேட்டுக்கிரகித்தல், வாசித்துக் கிரகித்தல் எனும் திறன்களை விருத்தி செய்வதற்கு நீங்கள் வழங்கக்கூடிய ஒவ்வொரு செயற்பாட்டினை விபரித்து அவை ஒவ்வொன்றிற்குமான கணிப்பீட்டு படிவங்களையும் தயாரிக்க.

(iii) ஆரம்ப வகுப்பு மாணவரின் மொழியறிவினை மேம்படுத்தக்கூடிய இணைப்பாடவிதான செயற்பாடுகள் மூன்றினை விபரிக்க.

(iv) "ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கான கல்வி, உளவியல் மயப்பட்டதாக இருத்தல் வேண்டும்" இக்கூற்றினை, கல்வி உளவியலாளர் ஒருவரின் கோட்பாடுகளின் அடிப்படையில் விபரிக்க.

(பதிப்புரிமை பெற்றது)